**கவனிக்க.-** *18.05.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (III) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1760 - 2012 මැයි මස 25 වැනි සිකුරාදා - 2012.05.25

*1760 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 896 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | 901 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) *துறைமுக விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தம்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *இலங்கை கணனிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *நிதி சட்டமூலம் 2012, மாச்சு 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி* V *இல் 2008 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (சனவரி-மாச்சு) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2012, யூன் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மே மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பதவிகள் — வெற்றிடம்

## அத்துரலிய பிரதேச சபை

அத்துரலிய பிரதேச சபையில் தற்சமயம் வெற்றிடமாகியுள்ள ஆயுள்வேத மருந்துக் கலவையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு அத்துரலிய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வதிவிடங்கொண்ட தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பின்வரும் கருமங்களுக்குரிய குறித்த விண்ணப்பதாரிகள் இங்கு வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின்படி தயார்செய்த படிவங்களைப் பூர்த்திசெய்து, "செயலாளர், அத்துரலிய பிரதேச சபை" என்ற முகவரிக்கு 2012.08.07 ஆந் திகதிக்கு முன்னர் பெறக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

| வரிசை இலக்கம் | பதவிப் பெயர் | பதவிகள் தொகை | சம்பளத் திட்டம் |
|---|---|---|---|
| 1 | ஆயுள்வேத மருந்துக் கலவையாளர் | 1 | மாதாந்தம் ரூ. 11,730-10x120-10x130- 10x145-12x160- ரூ. 17,600 அ. நி. 06/2006 (IV) படி PLI 2006A ஆரம்ப சம்பளம் 22 ஆவது படிமுறையாகும் |

3. **குறைந்தபட்ச கல்வித் தகைமை.**- சிரேஷ்ட பாடசாலை தராதரப்பத்திரம் அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு முறைக்கு மேற்படாதவாறு கணிதம்/ தூய கணிதம்/ எண்கணிதம்/ வர்த்தக கணிதம் மற்றும் சிங்களம்/ தமிழ் உட்பட்ட 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அல்லது

தேசிய கல்வித் தராதரப்பத்திரப் பரீட்சையில் ஒரே முறையில் கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

4. **தேவைப்படும் வேறு தகைமைகள்.**- அரச ஆயுள்வேத மருந்தகச்சாலையில் ஏதும் பதவியில் ஓராண்டுக்கு குறையாத சேவை அனுபவம் இருந்திடல்.

5. **சேவை வாய்ப்புக்குரிய விதிகள் :**

(i) பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் கொண்டது. விதவை/அநாதை ஓய்வூதியத் திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டது.

(ii) 3 வருடகால நன்நடத்தை சேவைக்கு உட்பட்டதாக தெரிவுசெய்யப்படுவர். இக்காலகட்டத்தில் சேவை வரவும், செயற்றிறனும் திருப்திகரமாக இருப்பின் நன்நடத்தை காலமுடிவில் பதவி நிரந்தரமாக்கப்படும்.

6. **வேறு பொது விதிகள் :**

(i) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் (தற்சமயம் அரச அல்லது உள்ளூராட்சி சேவையில் உள்ளோருக்கு வயதெல்லை இல்லை).

(ii) விண்ணப்பதாரி பாரம்பரிய அல்லது பதிவு முறையிலான இலங்கைப் பிரசையாக இருத்தல்.

(iii) நல்லொழுக்கமும் மிகுந்த சரீர சௌக்கியமும் உள்ளவராக இருத்தல்.

(iv) குற்றவியல் சட்டவிதிகளுக்கு அமைய நீதிமன்றினால் குற்றஞ்சாட்டப்பட்டு தண்டனை அனுபவித்திராதவராகவும், அரச அல்லது உள்ளூராட்சி சேவையில் இருந்து இடைநிறுத்தப்படாதவராகவும் இருத்தல்.

(v) அத்துரலிய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 3 வருடகால வதிவிடம் கொண்டவரென கிராமசேவை உத்தியோகத்தரால் வழங்கப்படும் அத்தாட்சிப்பத்திரத்தை பிரதேச செயலாளர் மூலம் உறுதிப்படுத்திச் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கவேண்டிய முறை.**- இவ்விளம்பரத்தில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் ஏ4 தாளில் மாத்திரம் தயாரித்த விண்ணப்பப்படிவத்தை 2012.08.07 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், பிரதேச சபை, அத்துரலிய" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிடல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவிக்கான தலைப்பு எழுதப்பட வேண்டும். (தற்சமயம் அரச அல்லது உள்ளூராட்சி சேவையில் உள்ளோரின் விண்ணப்பங்கள் தத்தமது நிறுவன அதிபரினூடாக அனுப்பப்படல் வேண்டும்.)

8. விண்ணப்பப்படிவத்தோடு பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைத்திட வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது அசல் சான்றிதழ்களும் தேசிய அடையாள அட்டையும் சமர்ப்பித்தல் அவசியம் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ்கள் ;
(iii) வதிவிடம் தொடர்பாக பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்ட கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் ;
(iv) அண்மையில் பெறப்பட்ட 2 நற்சான்றிதழ்கள் (இதில் ஒன்று கிராம உத்தியோகத்தரினால் பெறப்பட்டதாக இருத்தல் அவசியம்) ;
(v) தொழில் அனுபவங்கள் இருப்பின் அவற்றின் சான்றிதழ்கள் ;
(vi) சேவைச் சான்றிதழ்கள் (தற்சமயம் அரச/உள்ளூராட்சி சேவையாளர்கள் மாத்திரம்).

9. இவ்விண்ணப்பம் கோரப்பட்ட பின்னர் அல்லது இடைநடுவில் இவ்வாட்சேர்ப்பானதை பிற்போடவோ, மாற்றி அமைத்திடவோ, இவ்வறிவித்தலை இடைநிறுத்திடவோ அத்துரலிய பிரதேச சபையின் செயலாளர் பூரண அதிகாரம் கொண்டவராவார். தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புகளில் ஏதும் கருத்து குளறுபடிகள் இருப்பின் சிங்கள அறிவித்தலின் வியாக்கியானம் முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.

சரத் டீ சில்வா சப்புகொட்டன,
செயலாளர்,
அத்துரலிய பிரதேச சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அத்துரலிய பிரதேச சபை**

***தென் மாகாண அரச சேவையின் ............................ பதவி***

1. (அ) முதலெழுத்துடன் பெயர் :----.
(ஆ) முதலெழுத்துக்குரிய பெயர் :----.

2. (அ) நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
(ஆ) நிரந்தர முகவரி :----.

3. பால் :----.

4. (அ) பிறந்த திகதி :----.
(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு வயது :

வருடங்கள் .................... மாதங்கள் ....................... நாட்கள் .....................

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

6. விவாக நிலை :----.

7. இலங்கைப் பிரசையாயின் பிறப்பினாலா, பதிவினாலா ? விபரம் தருக :----.

8. நீர் எப்போதாவது நீதிமன்றம் ஒன்றினால் தண்டனை பெற்றுள்ளீரா ? விபரம் தருக :----.

9. கல்வித் தகைமைகள் :

(அ) பரீட்சையின் பெயர் :----.
(ஆ) பரீட்சை சுட்டிலக்கம் :----.
(இ) சித்திபெற்ற வருடம் :----.
(ஈ) சித்திபெற்ற பாடங்கள் :----.

10. தொழில் தகைமையும் அனுபவமும் :----.

11. தற்சமயம் நீர் பதிலிடையாக சேவை புரிபவராயின் சேவைக்காலம் மற்றும் விபரங்களும் பதவி நிலையும் (நிரந்தர/தற்காலிக/கொடுப்பனவு/பதிலிடையாக என்ற விபரம்) :----.

12. வேறு தகைமைகள் :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை என்றும், உண்மையானவை என்றும் மொழிகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானதென பதவிக்குத் தெரிவுசெய்யப்படுமுன்னர் அறியப்படுமாயின் நான்

தகுதியற்றவனாகிறேன் என்றும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அறியப்படுமாயின் நட்டஈடுகள் ஏதுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

*(தற்சமயம் சேவை புரிவோர் மாத்திரம்)*

இங்கு விண்ணப்பதாரியினால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாயும் சரியானவை என்றும், தெரிவுசெய்யப்படுவாராயின் இவரை சேவையிலிருந்து விடுதலை வழங்கிடவும், தற்சமயம் ............................... பதவியில் சேவை புரிகிறார் என்றும் உறுதிசெய்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

5-545

---

**வெலிகாமம் பிரதேச சபை**

தென் மாகாண அரச சேவையின் பதவி வெற்றிடம்

வெலிகாமம் பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாகியுள்ள கீழே குறிப்பிடப்படும் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதி வாய்ந்த வெலிகாமம் பிரதேச சபை வலுப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதுண்டு.

| பதவி பெயர் | வெற்றிடம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|
| 01 சுகாதார ஊழியர் | 01 | அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையொன்றில் 05 ஆம் தரத்தை சித்தியடைந்திருத்தல் |

2. **சம்பள அளவு**.- ரூபா 11,730 - 10×120 - 10 × 130 - 10 × 145 - 12 × 160- ரூபா 17,600.

3. **பொதுத் தகைமைகள்**.- (i) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டியதோடு வெலிகாம பிரதேச சபை வலுப் பிரதேசத்தினால் 03 வருட காலமாக நிரந்தர வதிவாளராகவும் இருத்தல் வேண்டும். (வலுப் பிரதேசத்தில் வசிக்கும் கிராம உத்தியோகத்தரால் பெற்றுக் கொண்ட சான்றிதழை பிரதேச செயலாளர் மேலொப்பமிட்டிருத்தல் வேண்டும்.)

(ii) விண்ணப்பப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாதும் 45 வயதிற்கு கூடாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் வயது எல்லை கவனிக்கப்படமாட்டாது.

(iii) நன்னடத்தையுடையவராகவும் நல்ல சரீர சுகத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(iv) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு எதிராக நடத்தப்பட்ட குற்றச்சாற்று காரணமாக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.

(v) வெலிகாம பிரதேச சபையில் தற்போது அமைய/தற்காலிக/கொந்திராத்து சேவை புரிவோர்களுக்கு முதலிடம் வழங்கப்படும்.

(vi) விண்ணப்பதாரிகள் குறைந்தளவில் மேற்குறித்த தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**4. சேவைக்கு அமர்த்துவதற்கான நிபந்தனைகள் .-**

(i) இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை மூலம் நடைபெறும்.

(ii) பதவி நிரந்தரமாகும் ஓய்வூதியம் உடையதுமாகும்.

(iii) பதவி பெற்றோர் அரச விதவைகள்/தபுதாரிகள், அநாதைக் குழந்தைகள் ஓய்வூதிய நிதித் திட்டத்திற்கு பங்கு கொள்ளுதல் வேண்டும்.

(iv) பதவி நிரந்தரம் 03 வருட நன்னடத்தை காலத்தின் பின்னராகும்.

(v) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிபந்தனைகளுக்கும் நிதிச் சட்டதிட்டங்களுக்கும் தென் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சேவை திணைக்களத்தின் நிபந்தனைகளுக்கும் வெலிகாமம் பிரதேச சபையால் தற்போது விதிக்கப்பட்டுள்ள விதிக்கப்படவுள்ள விதிகளுக்கும் அதன் ஒழுங்குவிதிகளுக்கும் அடிபணிதல் வேண்டும்.

5. **விண்ணப்பிக்கப்பட வேண்டிய முறை.**- தற்போது அரச சேவையில் மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரின் மூலம் அனுப்பப்படவேண்டியதோடு தாமதமாக கிடைத்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுண்டு :-

(அ) இவ்வறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்க தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2012.06.20 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதமாக தலைவர் வெலிகாமம் பிரதேச சபை, வெலிகாமம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் போடப்பட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியை குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் A4 அளவிலான கடதாசி தாள்களில் தயாரிக்கப்படல் வேண்டும். தாமதமாகி அல்லது நிபந்தனைகளுக்கு உட்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராக்கப்படுவதுண்டு. இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது இடைப்பட்ட காலப்பகுதியில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு தாமதமாக்குதல் அல்லது மாற்றுதல் அல்லது அறிவித்தலை இரத்துச் செய்தல் அனைத்து தகுதிகளும் வெலிகாமம் பிரதேச சபைக்குரியது.

(ஆ) விண்ணபடிப்படிவங்களுடன் கீழே குறிப்பிடப்படும் சான்றிதழ்களின் படப்பிரதிகள் இணைக்கப்பட வேண்டியதோடு, நேர்முகப் பரீட்சையின் போது மூலப் பிரதிகள் முன்வைக்கப்படல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) கல்விச் சான்றிதழ்;

(3) வதிவு தொடர்பாக பிரதேச செயலாளரின் உறுதியுடனான கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் ;

(4) சமீப காலத்தில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ் இரண்டு, (ஒன்று கிராம உத்தியோகத்தர் அவர்களின்);

(5) சேவைச் சான்றிதழ் பயிற்சி தொடர்பான சான்றிதழ் ;

(6) தற்போது உரிய பதவியில் அமைய/தற்காலிக/கொந்திராத்து சேவை ஒப்பந்தங்களின் கீழ் சேவை புரிபவராயின் நியமனக் கடிதம் மற்றும் சான்றிதழ்கள்.

6. ஆரம்பத் தகுதிகள் உள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்.

புஷ்பகுமார பெட்டகே,
தலைவர்,
வெலிகாமம் பிரதேச சபை.

வெலிகாமம் பிரதேச அலுவலகம்,
வெலிகாமம்.
2012.04.27.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**வெலிகாமம் பிரதேச சபை**

***தென் மாகாண அரச சேவையில் வெலிகம பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள ஆரம்பத் தரத்திலான கலையற்ற சேவையில் III ஆம் தரத்திலான சுகாதார ஊழியர் பதவி***

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.

(ii) முழுப்பெயர் :-----.

2. விலாசம் :-----.

3. கிராம உத்தியோகத்தர் பிரிவு தரம் :-----.

4. பிறந்த திகதி:-
ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :-

வருடங்கள் :----- மாதங்கள் :-----, நாட்கள் :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

6. ஆண்/பெண் :-----.

7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

8. வெலிகாமம் பிரதேச சபை வலுப்பிரதேசத்தில் நிரந்தரப் பதிவு காலம் :-----.

9. இலங்கை பிரஜை வதிவிலா/பதிவின் பின்னரா? :-----.

10. கல்வித் தகைமைகள் :-----.

11. வேறு தகைமைகள் :-----.

12 தொழில்சார் தகைமைகள் :-

சேவை அனுபவம் :
(i) தற்போது சேவை புரியும் நிறுவனம் :-----.
(ii) தற்போதைய பதவி :-----.
(iii) பதவி நியமனத் திகதி :-----.
(iv) இதற்கு முன்னர் சேவை புரிந்த நிலையமும், பதவியும் :-----.

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து விபரங்களும் உண்மையானதும் அதில் எதுவும் பிழை இல்லை எனவும் கூறுவதோடு, இவை பிழையானது எனத் தெரியவந்தால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பின் தெரியவந்தால் எனது நியமனம் இரத்துச் செய்யப்பட வேலையிலிருந்து நீக்கப்பட ஏதுவாகும் எனவும் ஏதும் தண்டப் பணம் இன்றி சேவையிலிருந்து நீக்கப்படும் எனவும் நான் அறிந்து கையொப்பமிடுகின்றேன்.

................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பத்தில் ........................... திரு. திருமதி/செல்வி தற்போது இத் திணைக்களத்தில்/நிறுவனத்தில்.................................. சேவை புரிகின்றார். மேற்படி பதவிக்காக அவர்/அவள் தெரிவு செய்யப்பட்டால் விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கின்றேன்./தெரிவிக்கவில்லை அவர்/அவள் எந்தவொரு வகையிலுமாக ஒழுக்காற்று விசாரணைக்கு தண்டனைக்கு உட்படுத்தப்படவில்லை எனவும் சான்று பகிர்கிறேன். விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்கிறேன்/சிபாரிசு செய்யவில்லை என சமர்ப்பிக்கின்றேன்.

........................
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்,
(பதவி முத்திரை)

பெயர் :-----.
பதவி :-----.
திணைக்களம் :-----.
திகதி :-----.

5-575

# துணை விதிகள்

## பொதுச் சந்தையை “சந்தைப் பிரதேசமாக” பிரகடனப்படுத்தல் பற்றிய துணை உறுப்புறை

*(257 ஆம் அதிகாரமாகிய) கிராம சபைக் கட்டளைச் சட்டத்தின் 42 இல் சரத்தின் கீழ் குருநாகல் மாவட்டத்தின் வாரியபொல கிராம சபை மூலம் தயாரிக்கப்பட்ட அந்தச் சரத்தின் பிரகாரம் தனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பொது நிருவாக உள்ளூராட்சி மற்றும் உள்நாட்டு அலுவலர்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட அந்த அமைச்சின் செயலாளரினால் 1974.08.30 ஆந் திகதி இடப்பட்ட 127 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டுள்ள பிரகாரம் வாரியபொல சந்தை சம்பந்தமாக உள்ள ‘சந்தைப் பிரதேசம்’ அந்த சந்தையிலிருந்து இரண்டு மைல்கள் விட்டமுள்ள வளையத்துக்குள் சந்தைப் பிரதேசமாக அமைய வேண்டும் என்ற துணை உறுப்புரையினை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தத்துடன் தொடர்ந்தும் வாரியபொல பிரதேச சபை ஏற்றுக்கொள்ளல் வேண்டுமென்றும், அந்த திருத்தத்தினை உள்ளடக்கிய துணை உறுப்புரை அறிவித்தல் 2003.10.30 ஆந் திகதி இடம் பெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து செல்லுபடியாகும் என்ற அடிப்படையில் செயற்படல் வேண்டுமென்றும் இத்தால் பிரேரிக்கப்படுகின்றது.*

*1. வாரியபொல பொதுச் சந்தை சம்பந்தமாக இதுவரையில் வாரியபொல நகர மத்தியிலிருந்து ஆரம்பித்துச் செல்லும் வீதி அபிவிருத்தி அதிகாரச் சபைக்கு சொந்தமான சிலாபம் பாதையும், புத்தளம் பாதையும் அந்த இரு பாதையினையும் இணைக்கும் குறிப்பிட்ட ஏ. அதிகாரி மாவத்தை ஆகிய மூன்று பாதைகளையும் எல்லையாகக் கொண்ட நிலப்பரப்பு வாரியபொல சந்தையாகக் கருத்திற்கொண்டு அந்த சந்தையினை மையமாக கொண்டு ஆரம்பித்துச் செல்லும் இரண்டு மைல்கள் அரை வட்டம் கொண்ட பிரதேசத்தை வர்த்தக சந்தைப் பிரதேசமாக அமைதல் வேண்டும்.*

*1.1 இந்த வர்த்தக சந்தைப் பிரதேசத்துக்குள் வாரியபொல பிரதேச சபையின் தலைவரினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி எந்த விதமான வர்த்தக சந்தைகள், வர்த்தக நிலையங்கள், இறைச்சி வகைகள் விற்பனை செய்யும் விற்பனை நிலையம் ஆரம்பித்தல், நடாத்திச் செல்லுதல், அல்லது நடமாடும் வர்த்தக வாகனத்தைப் பயன்படுத்தி வர்த்தக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வர்த்தக கண்காட்சிகள் நடாத்துதல் அல்லது நடாத்திச் செல்லுதல் கூடாது.*

*2. அனுமதிபத்திரம் கையிலிருந்தாலும் தலைவரினால் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் சுட்டிக் காட்டப்பட்ட இடங்களை தவிர வேறு எந்த ஒரு இடத்திலாயினும் வர்த்தகம் செய்தல் அல்லது அது சம்பந்தமாக பிரசார நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது.*

*3. மேலே குறிப்பிட்ட வர்த்தக வலயத்துக்குள் இறைச்சி வகைகள் விற்பனை செய்வதற்காக வர்த்தக நிலையங்கள் ஆரம்பித்தல் மற்றும் நடாத்திச் செல்லுதல், வாராந்த சந்தைகள், தினசரி சந்தைகள், இரவு பகல் சந்தைகளை நடாத்திச் செல்லுதல் ஆரம்பிப்பதற்கான முழு உரிமையும் வாரியபொல பிரதேச சபைக்கு சொந்தமானதாகும்.*

*4. இந்த வர்த்தக காணிகள், கடைகளை பிரயோசனப்படுத்துவது சம்பந்தமாக அறவிடும் கட்டணங்கள் மற்றும் வாடகை சம்பந்தமாக பிரேரணைகளை பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்படுதல் மூலம் தீர்மானிக்கப்பட்டு வருடாந்தம் நிறைவேற்றிக் கொள்ளல் வேண்டும்.*

*‘அதிகாரம் பெற்ற நபர்’ எனும் போது குறிப்பிட்ட விடயத்துக்காக தலைவரினால் கடிதம் மூலம் அதிகாரம் ஒப்படைக்கப்பெற்ற சபையின் ஒரு உத்தியோகத்தரையும் ‘சபை’ என்றால் வாரியபொல பிரதேச சபை என்றிம் கருதுதல் வேண்டும்.*

*என்னால் மொழிபெயர்க்கப்பட்டது.*

*ஆனந்த ஜயலத்,*
*தலைவர்,*
*வாரியபொல பிரதேச சபை.*

*பிரதேச சபை,*
*வாரியபொல.*
*2011.12.23.*

*5-647*